ஸ்ரீ

ஜிநாயநம ః

# நீலகேசி

## மூலமும் உரையும்

### கடவுள் வாழ்த்து

1 நல்லார் வணங்கப் படுவான் பிறப்பாதி நான்கு
மில்லா னுயிர்கட் கிடர்தீர்த் துயரின்ப மாக்குஞ்
சொல்லான் றருமச் சுடரா னெனுந் தொன்மையினு
னெல்லா முணர்ந்தா னவனே யிறையாக வேத்தி.

(இதன் பொருள் :) "நல்லார் வணங்கப் படுவான்" என்பது—ரிஷீந்திர, சுரேந்திர, நரேந்திராதிகளால் உலகிற்கொரு பெருந் 1தெய்வதை நீ யென்று நமஸ்காரஞ் செய்யப்படுவா னென்றவாறு.

"பிறப்பாதி நான்கு மில்லான்" என்பது— 2ஜாதி, 3ஜரா, மரண, ரோகங்களையும், 4காதி கர்மங்களையும் கெடுத்து, அவற்றினீங்கினு னென்றவாறு.

"உயிர்கட் கிடர்தீர்த் துயரின்ப மாக்குஞ் சொல்லான்" என்பது— 5 ஹவ்ய ஜீவன்கட் கிடராகிய 6பஞ்ச பரிவர்த்தனத்தைக் கெடுத்து, சுகத்தை எய்துவிக்குந் திருமொழி யுடையானென்றவாறு.

"தருமச்சுடரா னெனுந் தொன்மையினுன்" என்பது - மூன்றுலகிற்கும் தர்மாதித்தியனுகி, ஆதியும் அந்தமுமின்றி நித்தியனுயினுன் என்றவாறு.

---

1 தெய்வதை - தேவதை, தெய்வம்; 'தெய்வதம் - தைவதமென்னும் வடமொழிச் சிதைவு' சீவகசிந்தாமணி 314-ஆம் செய்யுள் உரை.

2 ஜாதி - பிறப்பு.

3 ஜரா - மூப்பு.

4 காதி கர்மங்கள் - ஆன்மாவின் சுவபாவ குணங்களை மறைக்கும் கர்மங்கள்.

5 ஹவ்ய ஜீவன் (பவ்ய ஜீவன்) - மோக்ஷமடைவதற்கு யோக்யதையுள்ள ஜீவன்.

6 பஞ்ச பரிவர்த்தனம்-திரவிய, க்ஷேத்திர, கால, ஹவ, ஹாவ என்பனவாம்; இவற்றின் விவரங்களை விசேடக் குறிப்பிற் காண்க.

bhavya

"எல்லா முணர்ந்தானவனே யிறையாக வேத்தி" என்பது—தானும், பிறிதுமாகிய [1]திரவ்ய, குண பர்யாயங்களைப் பிரத்தியக்ஷமாக உணர்ந்த [2]கேவல ஞானமும், அதனோடு [3]அவினாபாவியாகிய [4]கேவல தரிசன,—கேவல வீரிய, கேவல சுகமுமுடையானவனே சுவாமியாக ஸ்துதித்து என்றவாறு.

"தருமச்சுடர்" என்பது - [5]தீர்த்தகர பாவனை பாவித்து, எல்லா முணர்ந்தானென்றுமாம். இதனால் [6]குணானுபூர்விகிரமத்தால் [7]அர்ஹத் பரமேஷ்டிக்கு மங்கலஞ் செய்தவாறு.

இனி, நல்லார் வணங்கப்படுதென் முதலாயின [8]சுகதன் முதலாயினார்க்கெய்தா தாயினன்றே அர்ஹத் பரமேஷ்டிக்கு மங்கலமாவது? அஃதென்னை பெற்ற வாறெனின், குற்றமில்லாதாரை யன்றே நல்லார் வணங்குவது. ஹிம்ஸையும், அசத்தியமும், [9]ஸ்தேயமும், காமமும், [10]த்ரஷ்ணையும் முதலாகிய குற்றங்கள் சுகதன் முதலாயினார்க்குண்மையின், அவர் நல்லார் வணங்கப்படாரென்பது. சுகதனுக்குக் கொலை முதலாயின எங்ஙன முளவாகின்றனவெனில், [11]ஆத்மவதத் தாலும், [12]மாம்ஸபக்ஷணத்தாலும் கொலை யுண்டென்பது. உயிரை உடம்பி னின்று நீக்குதலிலும், வேதனா மரணங்களுண்மையினும் ஆத்மவதம் கொலையா மென்பது. கொலையுண்பானது இச்சையால், ஆத்மவதம் கொலையன்றெனில், இச்சை யுளவழிவரும் பாவதமும் கொலையன்றாதல்வேண்டும். பிறரை ரக்ஷித் தற்காகவும், பரோபகாரமாகவும் கோறலில் ஆத்மவதம் கொலையன்றெனில், இவ் வாறு நிகழும் பாவதமும் கொலை யன்றாதல்வேண்டும். ஆதலின், அது கொலை யேயாமென்க. இனி, மாம்ஸம் [13]பக்ஷிப்பார்க்குக் கொலையுண்டென்பது மேலே சொல்லுவாம். இனி, அது [14]காரணாத் பாவமன்றோ? கொள்ளப்படுமோ?

---

1 திரவ்ய குணபர்யாயம் - பொருள், குணம், தோற்றம்.
2 கேவல ஞானம் - கடையிலா வறிவு.
3 அவினா(பா)வியாகிய - பிரிக்க முடியாத.
4 கேவல தரிசன, கேவல வீரிய, கேவல சுகம் - கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம்.
5 தீர்த்தகரபா(பா)வனையின் விவரத்தை விசேடக் குறிப்பிற்காண்க.
6 குணானுபூர்விகிரமத்தால் - குணங்களின் வரிசைக் கிரமத்தால்.
7 அர்ஹத் பரமேஷ்டி - அருகக்கடவுள்.
8 சுகதன் - புத்தன்.
9 ஸ்தேயமும் - திருடும்.
10 த்ரஷ்ணையும் - ஆசையும்.
11 ஆத்மவதத்தாலும் - தன்னை வதைத்துக் கொள்வதாலும்.
12 மாம்ஸப(ப)க்ஷணத்தாலும் - மாமிசம் புசித்தலாலும்.
13 ப(ப)க்ஷிப்பார்க்கு - உண்பார்க்கு.
14 காரணாத் பாவம் - காரணத்தால் உண்டாகும் பாவம்.

bhaksipparkku

எனில், படும், [1]காரணத் புண்ணியம் நம்மாற் கொள்ளப்படுதலின். படாதேல் ஓர் அரசன் பள்ளிக்கு இறையிலி விட்டான்; அதனில்வந்த தனதான்யங்களால் பூஜை முதலாயின செய்த வழி அரசனுக்குப் புண்ணியமில்லையாம். ஆதலின், காரணத் புண்ணியங் கொள்ளப்படுதலின், காரணத் பாவமுங் கொள்ளவேண்டும். அன்றியும், மாம்ஸம் ஹ(ப)க்ஷிப்பார்க்குக் கொலையுண்டு, மாம்ஸத்தின் பொருட்டு, நிகழுங் கொலை மாம்ஸம் ஹ(ப)க்ஷிப்பாருண்டாயவழி யுண்டாய், இல்லையாய போதில்லையாமாதலால். [2]கும்பகாரனுண்டாயவழி கும்பம் உண்டாய், இல்லையாய வழி இல்லையாய் [3]வடக்ரியை கும்பகாரனதாயின வாறுபோல வென்பது. அல்லதூஉம்,

ghata kriyai

"ந ஸ கஶ்சித்ப்ரதிவ்யாதேரம்ஶோ யத்ர நஜந்தவ꞉
ஸம்ஸ்வேதஜாத்யா ஜாயந்தே ஸர்வம்பீஜாத்மகம் தத꞉"

masa kaścitprathi-vyā deramśo ya-trama jamtavah

[மண் முதலியவற்றுள் ஜீவனில்லாத ஒரு பாகமும் இல்லை. வேர்வை ஜீவன் முதலியனவும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாம் ஜீவமயமே.]

samsvedajādyā jāyamte sarvam bījātmaka-mtatah

எனவும்,

[4]"எனதெனச் சிந்தித்த லான்மற் றிவ்வுட லின்பத்துக் காமேற்
றினைபெய்த புன்கத்தைப் போலச் சிறியவு மூத்தவு மாகி
நினைய புழுக்குலந் தம்மா னுகரவும் வாழவும் பட்ட
இனைய வுடம்பினைப் பாவி யானென தென்னலு மாமோ?"

எனவும் இவற்றால் மாம்ஸத்துப் புழுவுண்டென்பது சொல்லி, அதனை ஹ(ப)க்ஷித்தலிற் கொலை யுண்டென் பது. மாம்ஸத்தின்பேனென்னும் உள்ள மல்லது உயிர் கொல்வேனென்னும் உள்ளம் இன்மையின், கொலையில்லையெனில், சிம்மம் முதலாகிய விலங்குகளுக்கும் ஹ(ப)க்ஷிப்பேனென்னும் உள்ள மல்லது கொல்வேனென்னும் உள்ளமின்மையிற் கொலையில்லை யென்பதாம். அன்றியும், ஊரிலுள்ளாரைக் கொல்வேனென்னும் உள்ளமின்றி, ஊர் சுடுவேனென்னும் உள்ளத்தாற் சுட்டார்க்கும் கொலையில்லையாம். சுட்டால் ஊரிலுள்ளார் இறப்பரென்றறிந்து சுடுதலிற் கொலையுண்டெனில், தின்றால் மாம்ஸத்திற் பிராணி இறக்குமென்றறிந்து தின்றலிற் கொலையுண்டென்பது. அன்றியும்,

[5]"வீதல் வீவ துயிராத லக்குறி
காய்தல் கோறல் கொலையேவ லென்றிவை

1 காரணத் புண்ணியம் - காரணத்தால் உண்டாகும் புண்ணியம்.
2 கும்பகாரன் - குயவன்.
3 வடக்ரியை = கடக்கிரியை - குடம் செய்யுந் தொழில்.
4 குண்டலகேசிச் செய்யுள்
5 குண்டலகேசிச் செய்யுள். புத்தவாத சருக்கம் 80-ஆம் செய்யுள் உரையில் காண்க.

ghata kriyai